**SUB- INSPECTOR OF FISHERIES IN FISHERIES DEPARTMENT IN TAMIL NADU FISHERIES SUBORDINATE SERVICE – 07/02/2023**

1. Chlorophyll present in the leaf is required for
   **a. Photosynthesis** b. Tropic movement c. Transpiration
   d. Nastic movement e. Answer not known
   இலையில் காணப்படும் பச்சையம் ______ க்குத் தேவைப்படுகின்றது.
   a. ஒளிச்சேர்க்கை b. சார்பசைவு c. நீராவிப்போக்கு
   d. திசை சாரா தூண்டல் அசைவு e. விடை தெரியவில்லை

2. Assertion [A]: Haemoglobin contains Iron.
   Reason [R]: Iron deficiency leads to Anaemia.
   **a. Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A].**
   b. Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A].
   c. [A] is true, but [R] is false
   d. [A] and [R] is false
   e. Answer not known
   கூற்று (A): ஹீமோகுளோபினில் இரும்புச் சத்து உள்ளது.
   காரணம் (R): இரும்புச்சத்து குறைபாடு இரத்தசோகை நோயை ஏற்படுத்துகிறது.
   a. [A] மற்றும் [R] இரண்டும் சரி; [R] என்பது [A]விற்கு சரியான விளக்கம் ஆகும்.
   b. [A] மற்றும் [R] இரண்டும் சரி; ஆனால் [R]-விற்கு சரியான விளக்கம் அல்ல
   c. [A] சரி; ஆனால் [R] தவறு
   d. கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் தவறு
   e. விடை தெரியவில்லை

3. The state is which there is an accumulation of excess body fat with an abnormal increase in body weight is called
   a. Diabetes b. Polyuria **c. Obesity**
   d. Polydipsia e. Answer not known
   உடலில் அதிகப்படியான கொழுப்பு சேர்வதால் உடலின் எடை அசாதாரணமாக அதிகரிக்கும். இதனை _______ என்பார்கள்.
   a. நீரிழிவு b. பாலியூரியா c. உடல் பருமன்
   d. பாலிடிப்சியா e. விடை தெரியவில்லை

4. The atmospheric carbon di oxide enters into the plants and fixed through the process called
   **a. Photosynthesis** b. Transpiration c. Respiration
   d. Decomposition e. Answer not known
   வளிமண்டல கார்பன் டை ஆக்சைடு தாவரங்களுக்குள் சென்று நிலைப்படுத்தப்படும் நிகழ்வு ______ என அழைக்கப்படுகின்றது.
   a. ஒளிச்சேர்க்கை b. நீராவியாதல் c. சுவாசித்தல்

d. சிதைத்தல் e. விடை தெரியவில்லை

5. Choose the right matches among the following:

A. Phenolphthalein in acidic medium - Colourless
B. Phenolphthalein in basic medium - Yellow
C. Methyl orange in acidic medium - Pink/Red
D. Methyl orange in basic medium - Colourless

**a. A and C are correct** b. (A) and (B) are correct
c. B and C are correct d. C and D are correct
e. Answer not known

கீழ்கண்டவற்றுள் சரியான ஒப்பிடுதலை தேர்ந்தெடுக்கவும் :

A. அமில ஊடகத்தில் பினாப்தலீன் - நிறமற்றது
B. கார ஊடகத்தில் பினாப்தலீன் - மஞ்சள்
C. அமில ஊடகத்தில் மெத்தில் ஆரஞ்சு - இளஞ்சிவப்பு/சிவப்பு
D. கார ஊடகத்தில் மெத்தில் ஆரஞ்சு - நிறமற்றது

a. (a) மற்றும் (c) சரியானவை b. (a) மற்றும் (b) சரியானவை
c. (b) மற்றும் (c) சரியானவை d. (c) மற்றும் (d) சரியானவை
e. விடை தெரியவில்லை

6. The measurement which is used to measure the ignition delay of the fuel in diesel engine is

**a. Cetane number** b. Octane number c. Calorific value
d. Specific energy e. Answer not known

டீசல் எஞ்சினில் உள்ள எரிபொருளின் பற்றவைப்பு தாமதக் கால அளவை அளப்பதற்கு உதவும் அளவு

a. சீட்டேன் எண் b. ஆக்டேன் எண் c. கலோரி மதிப்பு
d. தன் ஆற்றல் e. விடை தெரியவில்லை

7. The atomic mass of the middle element is nearly the same as average of atomic masses of other two elements.

a. Modern periodic law b. Newland's law of octaves
**c. Dobereiner's law of triads** d. Mendeleev's law of periodicity
e. Answer not known

மத்தியில் உள்ள தனிமத்தின் அணு நிறையானது ஏறக்குறைய மற்ற இரு தனிமங்களின் அணுநிறையின் சராசரிக்குச் சமமாகும்.

a. நவீன ஆவர்த்தன விதி b. நியூலாந்தின் எண்ம விதி
c. டாபர்னீரின் மும்மை விதி d. மெண்ட்லீவின் ஆவர்த்தன விதி
e. விடை தெரியவில்லை

8. Match correctly the physical quantities with their SI units.

A. Pressure 1. $Nm^{-1}$
B. Area 2. $Nm^{-2}$
C. Surface Tension 3. N
D. Force 4. $m^2$

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 3 | 2 | 4 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| **c.** | **2** | **4** | **1** | **3** |
| d. | 4 | 2 | 3 | 1 |

e. Answer not known

இயற்பியல் அளவுகளை அதன் SI அலகுகளுடன் சரியாகப் பொருத்துக:

A. அழுத்தம் 1. $Nm^{-1}$
B. பரப்பு 2. $Nm^{-2}$
C. பரப்பு இழுவிசை 3. N
D. விசை 4. $m^2$

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 3 | 2 | 4 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| **c.** | **2** | **4** | **1** | **3** |
| d. | 4 | 2 | 3 | 1 |

e. விடை தெரியவில்லை

9. Group of Stars is called
a. Solar system **b. Constellation** c. Planets
d. All the above e. Answer not known

விண்மீன்களின் குழுக்கள் ______ என்று அழைக்கப்படுகின்றன.
a. சூரிய மண்டலம் b. நட்சத்திரக் கூட்டங்கள் c. கோள்கள்
d. இவை அனைத்தும் e. விடை தெரியவில்லை

10. At higher altitude, the boiling point of a substance will
**a. decrease** b. increase c. decrease and then increase
d. increase and then decrease e. Answer not known

உயரமான இடங்களில், பொருளின் கொதிநிலை
a. குறையும் b. அதிகரிக்கும் c. குறைந்து, பின் அதிகரிக்கும்
d. அதிகரித்து, பின் குறையும் e. விடை தெரியவில்லை

11. Which of the following statements are true about Himalayas?
(i) The Greater Himalayas are also called Himadri.
(ii) The Greater Himalayas receive more rainfall compared to the lesser Himalayas and the Siwalik.
(iii) Major hill stations are located in the Himachal Range.
a. (i) only **b. (i) and (iii) only** c. (i) and (ii) only
d. (ii) and (iii) only e. Answer not known

இமயமலை பற்றிக் கூறப்படும் பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?
(i) பெரிய இமயமலை இமாத்ரி என்று அழைக்கப்படும்.
(ii) சிறிய இமயமலை மற்றும் சிவாலிக் குன்றுகளை ஒப்பிடும் போது இப்பகுதி அதிக மழையைப் பெறுகின்றது.
(iii) புகழ் பெற்ற கோடை வாழிடங்கள் இமயமலைத் தொடரில் அமைந்துள்ளன.
a. (i) மட்டும் b. (i) மற்றும் (iii) மட்டும் c. (i) மற்றும் (ii) மட்டும்
d. (ii) மற்றும் (iii) மட்டும் e. விடை தெரியவில்லை

12. Which is longest dam in the World?
a. Nagarjuna Sagar Dam **b. Hirakud Dam**
c. Bhakra-Nangal Dam d. Damodar Valley Dam
e. Answer not known

உலகின் மிக நீளமான அணை எது?
a. நாகார்ஜுன் சாகர் அணை b. ஹிராகுட் அணை
c. பக்ரா-நங்கல் அணை d. தாமோதர் பள்ளத்தாக்கு அணை
e. விடை தெரியவில்லை

13. Tidal forests are also known as
a. Monsoon forests b. Alpine forest **c. Mangrove forests**
d. Rainy forests e. Answer not known
ஓதக்காடுகள் ______ என்றும் அழைக்கப்படுகின்றன.
a. பருவகாலக் காடுகள் b. அல்பைன் காடுகள் c. அலையாத்திக் காடுகள்
d. மழைக் காடுகள் e. விடை தெரியவில்லை

14. The headquarter of East – Central Railway is located in
a. Jabalpur **b. Hazipur** c. Jaipur
d. Bilaspur e. Answer not known
கிழக்கு மத்திய இரயில்வேயின் தலைமையிடம் எங்கு அமைந்துள்ளது?
a. ஜபல்பூர் **b. ஹாசிப்பூர்** c. ஜெய்ப்பூர்
d. பிலாஸ்பூர் e. விடை தெரியவில்லை

15. The celebration of world population day July 11th is started from the year.
a. 1986 b. 1987 c. 1988 **d. 1989** e. Answer not known
உலக மக்கள்தொகை தினம் ஜூலை 11ஆம் நாள் என்பது எந்த ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது?
a. 1986 b. 1987 c. 1988 **d. 1989** e. விடை தெரியவில்லை

16. Which of the following force is not in service for the management of disasters in the district organisation?
**a. Postal Department** b. Revenue Department
c. Civil Administration d. Local Police
e. Answer not known
பின்வருவனவற்றுள் எத்துறை பேரிடர் மேலாண்மை ஆணையத்துடன் செயல்படுகின்ற மாவட்ட அமைப்பு அல்ல?
a. அஞ்சல் துறை b. வருவாய்த் துறை c. குடிமைப்பணி நிர்வாகம்
d. உள்ளூர் காவல்துறை e. விடை தெரியவில்லை

17. Which Article of Indian Constitution provides for an Election Commission?
a. Article 280 b. Article 302 c. Article 316
**d. Article 324** e. Answer not known
இந்திய தேர்தல் ஆணையம் அமைக்க வழி வகை செய்யும் அரசியல் அமைப்புப் பிரிவு எது?
a. அரசியல் அமைப்புப் பிரிவு 280 b. அரசியல் அமைப்புப் பிரிவு 302
c. அரசியல் அமைப்புப் பிரிவு 316 d. அரசியல் அமைப்புப் பிரிவு 324
e. விடை தெரியவில்லை

18. The articles that are related to citizenship are
**a. Article 5 to 11** b. Article 14 to 18 c. Article 19 to 22
d. Article 25 to 28 e. Answer not known
குடியுரிமைப் பற்றி தொடர்புள்ள சட்டப்பிரிவுகளாவன
a. சட்டப்பிரிவு 5-11 b. சட்டப்பிரிவு 14-18 c. சட்டப்பிரிவு 19-22
d. சட்டப்பிரிவு 25-28 e. விடை தெரியவில்லை

19. Choose the correct answer.
Elementary education is a fundamental right under Article
a. Article 51 A b. Article 21 c. Article 29
**d. Article 21A** e. Answer not known
சரியான விடையைத் தேர்வு செய்க.
தொடக்கக்கல்வி கற்றலை அடிப்படை உரிமையாகச் சேர்க்கப்பட்டுள்ள சட்டப்பிரிவு எது?

a. சட்டப்பிரிவு 51A b. சட்டப்பிரிவு 21 c. சட்டப்பிரிவு 29
d. சட்டப்பிரிவு 21A e. விடை தெரியவில்லை

20. Choose the correct answer:
POCSO Act
a. Children Economic Exploitation
b. Children Sexual Exploitation
c. Children Sexual Abuse
**d. Protection of children from sexual offences Act**
e. Answer not known
சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
'போக்சோ' – சட்டம் என்பது ______ ஆகும்.
a. குழந்தைகள் மீதான பொருளாதாரச் சுரண்டல்
b. குழந்தைகள் மீதான பாலியல் சுரண்டல்
c. குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல்
d. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம்
e. விடை தெரியவில்லை

21. Elected members of the Parliament from Tamilnadu
**a. Rajya Sabha – 18 members and Lok Sabha – 39 members.**
b. Rajya Sabha – 28 members and Lok Sabha – 39 members.
c. Rajya Sabha – 81 members and Lok Sabha – 39 members.
d. Rajya Sabha – 80 members and Lok Sabha – 39 members.
e. Answer not known
தமிழகத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை
a. மாநிலங்களவை 18 உறுப்பினர்கள் மற்றும் மக்களவை 39 உறுப்பினர்கள்
b. மாநிலங்களவை 28 உறுப்பினர்கள் மற்றும் மக்களவை 39 உறுப்பினர்கள்
c. மாநிலங்களவை 81 உறுப்பினர்கள் மற்றும் மக்களவை 39 உறுப்பினர்கள்
d. மாநிலங்களவை 80 உறுப்பினர்கள் மற்றும் மக்களவை 39 உறுப்பினர்கள்
e. விடை தெரியவில்லை

22. The authority to alter the boundaries of State in India rests with
a. The President b. The Prime Minister c. State Government
**d. Parliament** e. Answer not known
இந்திய மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் அதிகாரம் _______ இடம் உள்ளது.
a. குடியரசுத் தலைவர் b. பிரதம அமைச்சர் c. மாநில அரசாங்கம்
c. நாடாளுமன்றம் e. விடை தெரியவில்லை

23. The Central Government Hindu Succession Act was amended in the year
a. 2002 b. 2003 c. 2004 **d. 2005** e. Answer not known
மத்திய அரசு இந்து வாரிசுரிமை சட்டம் எந்த ஆண்டு திருத்தங்களை மேற்கொண்டது?
a. 2002 b. 2003 c. 2004 **d. 2005** e. விடை தெரியவில்லை

24. The term "Pressure Group" originated by
**a. U.S.A. (United States of America**) b. India c. England
d. Canada e. Answer not known
அழுத்தக் குழுக்கள் என்னும் சொல்லினை உருவாக்கிய நாடு
a. அமெரிக்க ஐக்கிய நாடுகள் b. இந்தியா c. இங்கிலாந்து
d. கனடா e. விடை தெரியவில்லை

25. The institution of Lokayukta was created first in Maharastra in the year
a. 1970 **b. 1971** c. 1972 d. 1973 e. Answer not known
லோக்ஆயுக்தா அமைப்பு மகாராஷ்டிரா மாநிலத்தில் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
a. 1970 **b. 1971** c. 1972 d. 1973 e. விடை தெரியவில்லை

26. In which year Periyar E.V.R. published a English magazine under the title "Revolt"?
a. 1925 **b. 1928** c. 1933 d. 1934 e. Answer not known
'ரிவோல்ட்' என்னும் ஆங்கிலப் பத்திரிக்கையை ஈ.வே.ரா பெரியார் தொடங்கிய ஆண்டு எது?
a. 1925 **b. 1928** c. 1933 d. 1934 e. விடை தெரியவில்லை

27. Bharathi was displaced to ____ area due to English intimidation.
a. Mahe **b. Pondicherry** c. Bombay
d. Kasi e. Answer not known
ஆங்கிலேயர் அச்சுறுத்தல் காரணமாக பாரதி ______ பகுதிக்கு இடம் பெயர்ந்தார்.
a. மாஹே b. பாண்டிச்சேரி c. பம்பாய்
d. காசி e. விடை தெரியவில்லை

28. The Indian National Army trials were held at
a. Agra Fort **b. Red Fort** c. Fort William
d. Fort St. George e. Answer not known
இந்திய தேசிய இராணுவத்தின் மீது விசாரணை நடைபெற்ற இடம் _____ ஆகும்.
a. ஆக்ரா கோட்டை b. செங்கோட்டை c. வில்லியம் கோட்டை
d. புனித ஜார்ஜ் கோட்டை e. விடை தெரியவில்லை

29. Who has written "Amar Sonar Bangla" the National Anthem of Bangladesh?
a. Syed Abu Mohammad b. Rajani Kanta Sen **c. Rabindranath Tagore**
d. Mukunda Das e. Answer not known
"அமர் சோனார் பங்களா" என்ற வங்காள தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?
a. சையது அபு முகம்மது b. இரஜினி கந்தா சென் c. இரவீந்திரநாத் தாகூர்
d. முகுந்தா தாஷ் e. விடை தெரியவில்லை

30. Political Guru of Kamaraj was
a. Rajaji **b. Sathyamurthi** c. Nehru
d. Gandhi e. Answer not known
காமராசரின் அரசியல் குரு யார்?
a. இராஜாஜி b. சத்தியமூர்த்தி c. நேரு
d. காந்தி e. விடை தெரியவில்லை

31. Who was the Political Guru of Mahatma Gandhi?
a. M.G. Ranade b. W.C. Banerjee c. Balagangatara Tilak
**d. Gopalakrishna Gokhale** e. Answer not known
மகாத்மா காந்தியின் அரசியல் குரு யார்?
a. M.G. ராணடே b. W.C. பானர்ஜீ c. பாலகங்காதர திலகர்
d. கோபால கிருஷ்ண கோகலே e. விடை தெரியவில்லை

32. Which Day was observed on 8th January 1933?
**a. Temple Entry Day** b. Day of Deliverance c. Direct Action Day
d. Independence Day e. Answer not known
1933-ஆம் ஆண்டு ஜனவரி 8-ஆம் நாள் எந்த நாளாக அனுசரிக்கப்பட்டது?
a. கோவில் நுழைவு நாள் b. மீட்பு நாள் (டெலிவர்ன்ஸ் டே)

c. நேரடி நடவடிக்கை நாள் d. சுதந்திர பெருநாள்
e. விடை தெரியவில்லை

33. Sivasubramanianar was executed on 13 September 1799 at
a. Kayathar **b. Nagalapuram** c. Virupachi
d. Panchalamkurichi e. Answer not known
சிவசுப்பிரமணியனார் 1799 செப்டம்பர் 13 ஆம் நாள் தூக்கிலிடப்பட்ட இடம்
a. கயத்தாறு b. நாகலாபுரம் c. விருப்பாட்சி
d. பாஞ்சாலங்குறிச்சி e. விடை தெரியவில்லை

34. ____ day was declared as 'Purna Swaraj Day' by the Indian National Congress.
**a. January 26, 1930** b. January 29, 1929 c. August 16, 1930
d. August 18, 1930 e. Answer not known
இந்திய தேசிய காங்கிரசால் பூரண சுதந்திர நாளாகக் கொண்டாடிய நாள்
a. ஜனவரி 26, 1930 b. ஜனவரி 29, 1929 c. ஆகஸ்ட் 16, 1930
d. ஆகஸ்ட் 18, 1930 e. விடை தெரியவில்லை

35. When a number is decreased by 25%, it becomes 120. Find the number.
a. 150 b. 140 **c. 160** d. 180 e. Answer not known
ஓர் எண்ணின் மதிப்பை 25% குறைத்தால் 120 கிடைக்கிறது எனில் அந்த எண்ணைக் காண்க.
a. 150 b. 140 **c. 160** d. 180 e. விடை தெரியவில்லை

36. In an examination A got 25% marks more than B. B got 10% less than C and C got 25% more than D. If D got 320 marks out of 500. Find the marks obtained by A.
a. 405 **b. 450** c. 360 d. 400 e. Answer not known
ஒரு தேர்வில் A என்பவர் Bயை விட 25% மதிப்பெண்கள் அதிகம் பெற்றுள்ளார். B என்பவர் Cயை விட 10% குறைவாக பெற்றுள்ளார். C என்பவர் னுயை விட 25% மதிப்பெண்கள் அதிகம் பெற்றுள்ளார். D என்பவர் மொத்த மதிப்பெண்கள் 500 க்கு 320 பெற்றுள்ளார் எனில் A என்பவர் பெற்ற மதிப்பெண்கள் எவ்வளவு?
a. 405 **b. 450** c. 360 d. 400 e. விடை தெரியவில்லை

37. Find the single discount in % which is equivalent to two successive discounts of 25% and 20% given on an article.
**a. 40%** b. 45% c. 5% d. 22.5% e. Answer not known
ஒரு பொருளின் மீது வழங்கப்படும் இரு தொடர் தள்ளுபடிகள் முறையே 25% மற்றும் 20% எனில், இதற்கு நிகரான ஒரே சமானத் தள்ளுபடி சதவீதத்தினைக் காண்க.
**a. 40%** b. 45% c. 5% d. 22.5% e. விடை தெரியவில்லை

38. Find the HCF and LCM of the numbers 154, 198 and 286.
**a. 22, 18018** b. 154, 18018 c. 18018, 22
d. 191, 18018 e. Answer not known
154, 198 மற்றும் 286 ஆகிய எண்களுக்கு மீ.பொ.கா. மற்றும் மீ.பொ.ம. காண்க.
**a. 22, 18018** b. 154, 18018 c. 18018, 22
d. 191, 18018 e. விடை தெரியவில்லை

39. The LCM of 8 $p^2qr$, 12 $p^2r^2$, 24 pqr is
**a. 24 $p^2qr^2$** b. 8 $p^2qr^2$ c. 12 pr
d. 24 pqr e. Answer not known
8 $p^2qr$, 12 $p^2r^2$, 24 pqr என்ற எண்களின் மீ.பொ.ம
**a. 24 $p^2qr^2$** b. 8 $p^2qr^2$ c. 12 pr

d. 24 pqr		e. விடை தெரியவில்லை

40. In a school, there is 7 period a day each of 45 minutes duration. If the school has 9 periods a day assuming the number of hours to be the same then the duration of each period in
a. 25	b. 20	**c. 35**	d. 30	e. Answer not known
ஒரு பள்ளியில் 45 நிமிடங்களைக் கொண்ட 7 பாட வேளைகள் உள்ளன. அப்பள்ளியில் பாட வேளைகள் 9 ஆக மாறும் போது ஒவ்வொரு பாட வேளையின் கால அளவு
a. 25	b. 20	**c. 35**	d. 30	e. விடை தெரியவில்லை

41. The ratio of the income and to the expenditure of a family is 7 : 6. If the income is Rs. 21,000, then the savings is
a. Rs. 6,000	b. Rs. 5,000	**c. Rs. 3,000**
d. Rs. 4,000	e. Answer not known
ஒரு குடும்பத்தின் வரவுக்கும் செலவுக்கும் இடையே உள்ள விகிதம் 7 : 6 மற்றும் வரவு ரூ. 21,000 எனில் சேமிப்பு
a. ரூ. 6,000	b. ரூ. 5,000	c. ரூ. 3,000
d. ரூ. 4,000	e. விடை தெரியவில்லை

42. If A : B = 4 : 6, B : C = 18:5, then A : B : C is
a. 16 : 22 : 30	b. 12 : 20 : 5	c. 14 : 20 : 15
**d. 12 : 18 : 5**	e. Answer not known
A : B = 4 : 6, B : C = 18:5 எனில் A : B : Cன் விகிதம்
a. 16 : 22 : 30	b. 12 : 20 : 5	c. 14 : 20 : 15
**d. 12 : 18 : 5**	e. விடை தெரியவில்லை

43. A sum of simple interest at $13\frac{1}{2}\%$ per annum to Rs. 2,502.50 after 4 years. Find the sum.
a. 1526	b. 1256	c. 2156
**d. 1625**	e. Answer not known
ஒரு தொகையானது ஆண்டுக்கு $13\frac{1}{2}\%$ தனிவட்டி வீதத்தில் 4 வருடங்களில் ரூ. 2,502.50 ஐத் தருகிறது எனில் அந்த தொகையைக் காண்க.
a. 1526	b. 1256	c. 2156
**d. 1625**	e. விடை தெரியவில்லை

44. A sum of Rs. 36,000 was lent out at S.I. and at the end of 2 years and 3 months. The total amount was Rs.42,480. Find the rate of interest per year.
a. 5%	b. 6%	c. 7%
**d. 8%**	e. Answer not known
கடனாக வழங்கப்பட்ட அசல் ரூ. 36,000க்கு 2 ஆண்டுகள் 3 மாத காலத்திற்கு பின் தனிவட்டி மூலம் பெறப்பட்ட மொத்த தொகை ரூ. 42,480 எனில் வட்டி வீதம் யாது?
a. 5%	b. 6%	c. 7%
**d. 8%**	e. விடை தெரியவில்லை

45. Which bank is called as lender of last resort?
a. Commercial Bank	b. Indian Bank	**c. Reserve Bank of India**
d. State Bank of India	e. Answer not known
எந்த வங்கி கடன் வழங்குவதில கடைசி புகலிடம் என்று அழைக்கப்படுகிறது?
a. வணிக வங்கி	b. இந்தியன் வங்கி	c. ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா
d. ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா	e. விடை தெரியவில்லை

46. If the compound interest on a certain sum at $16\frac{2}{3}$ % for 3 years is Rs. 1,270. Find the simple interest on the same sum at the same rate and for the same period.

**a. Rs. 1,080** b. Rs. 1,000 c. Rs. 1,090
d. Rs. 1,070 e. Answer not known

ஒரு தொகையில் கூட்டுவட்டி $16\frac{2}{3}$ %க்கு 3 ஆண்டுகளுக்கு ரூ. 1,270 வட்டியாக கிடைக்கிறது எனில் அதே தொகைக்கு தனிவட்டி வீதத்தில் 3 ஆண்டு முடிவில் கிடைக்கும் வட்டித் தொகை எவ்வளவு?

a. ரூ. 1,080 b. ரூ. 1,000 c. ரூ. 1,090
d. ரூ. 1,070 e. விடை தெரியவில்லை

47. The bacteria in a culture grows by 5% in the first hour, decreases by 8% in the second hour and again increases by 10% in the third hour. Find the count of the bacteria at the end of 3 hours, if its initial count was 10,000.

a. 9266 b. 9626 **c. 10626**
d. 10266 e. Answer not known

ஒரு வகையான பாக்டீரியா முதலாவது ஒரு மணி நேரத்தில் 5% வளர்ச்சியும் இரண்டாவது மணி நேரத்தில் 8% வளர்ச்சி குன்றியும், மூன்றாவது மணி நேரத்தில் 10% வளர்ச்சியும் அடைகிறது. தொடக்கத்தில் அதன் எண்ணிக்கை 10,000 ஆக இருந்தது எனில் மூன்று மணி நேரத்திற்குப் பிறகு அதன் எண்ணிக்கையைக் காண்க.

a. 9266 b. 9626 **c. 10626**
d. 10266 e. விடை தெரியவில்லை

48. The internal and external radii of a hollow hemispherical shell are 3 m and 5 m respectively. Find the C.S.A. and T.S.A. of the shell?

**a. 213.71 $m^2$, 264 $m^2$** b. 214.70 $m^2$, 260 $m^2$ c. 210.71 $m^2$, 265 $m^2$
d. 210.71 $m^2$, 264 $m^2$ e. Answer not known

ஓர் உள்ளீடற்ற அரைக்கோள ஓட்டின் உள் மற்றும் வெளிப்புற ஆரங்கள் முறையே 3 மீ மற்றும் 5 மீ ஆகும். ஓட்டின் வளைபரப்பு மற்றும் மொத்தப் புறப்பரப்பு காண்க.

**a. 213.71 $m^2$, 264 $m^2$** b. 214.70 $m^2$, 260 $m^2$ c. 210.71 $m^2$, 265 $m^2$
d. 210.71 $m^2$, 264 $m^2$ e. விடை தெரியவில்லை

49. The ratio of the volumes of a cylinder, a cone and a sphere, if each has the same diameter and same height is

a. 1 : 2 : 3 b. 2 : 1 : 3 **c. 3 : 1 : 2**
d. 1 : 3 : 2 e. Answer not known

சமமான விட்டம் மற்றும் உயரம் உடைய ஓர் உருளை, ஒரு கூம்பு மற்றும் ஒரு கோளத்தில் கன அளவுகளின் விகிதம்.

a. 1 : 2 : 3 b. 2 : 1 : 3 **c. 3 : 1 : 2**
d. 1 : 3 : 2 e. விடை தெரியவில்லை

50. A and B can together finish a work in 30 days. They worked together for 20 days and then B left. After another 20 days, A finished the remaining work. In how many day A alone can finish the job?

**a. 60 days** b. 54 days c. 50 days
d. 40 days e. Answer not known

'A' மற்றும் 'B' ஆகியோர் இணைந்து ஒரு வேலையை 30 நாட்களில் முடிப்பர். இருவரும் சேர்ந்து 20 நாட்கள் வேலை செய்த பிறகு 'B' சென்று விடுகிறார். மீதமுள்ள வேலையை 'A' 20 நாட்களில் முடிப்பார் எனில், முழு வேலையை 'A' எத்தனை நாட்களில் முடிப்பார்?

a. 60 நாட்கள் b. 54 நாட்கள் c. 50 நாட்கள்
d. 40 நாட்கள் e. விடை தெரியவில்லை

51. A man starts his journey from Chennai to Delhi by train. He starts at 22.30 hours on Wednesday. If it takes 32 hours of travelling time and assuming that the train is not late, when will he reach Delhi?

**a. Friday – 6:30 a.m** b. Friday – 6:30 p.m. c. Wednesday – 1:30 p.m d. Thursday – 11:00 a.m e. Answer not known

ஒருவர் சென்னையிலிருந்து டெல்லிக்குச் செல்ல இரயிலில் புறப்படுகிறார். அவர் தனது பயணத்தைப் புதன்கிழமை 22.30 மணிக்குத் தொடங்குகிறார். எந்தவிதத் தாமதமுமின்றி இரயில் செல்வதாகக் கண்டால் மொத்தப் பயண நேரம் 32 மணி நேரம் ஆகும். அவர் எப்பொழுது டெல்லியைச் சென்றடைவார்?

a. வெள்ளிக்கிழமை – 6:30 a.m b. வெள்ளி – 6:30 p.m c. புதன்கிழமை - 1:30 p.m d. வியாழக்கிழமை – 11.00 a.m e. விடை தெரியவில்லை

52. An integer is chosen from the first twenty natural numbers. What is the probability that is a Prime Number?

a. $\frac{1}{6}$ b. $\frac{1}{2}$ **c. $\frac{2}{5}$** d. $\frac{3}{5}$ e. Answer not known

முதல் இருபது இயல் எண்களிலிருந்து ஒரு முழு எண் சமவாய்ப்பு முறையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அந்த எண் பகா எண்ணாக இருப்பதற்கான நிகழ்தகவினைக் காண்க.

a. $\frac{1}{6}$ b. $\frac{1}{2}$ **c. $\frac{2}{5}$** d. $\frac{3}{5}$ e. விடை தெரியவில்லை

53. The mean of 5, 9, x, 17 and 21 is 13, then find the value of x.

a. 9 **b. 13** c. 17 d. 21 e. Answer not known

5, 9, $x$, 17 மற்றும் 21ன் சராசரியானது 13 எனில், $x$ ன் மதிப்பு காண்.

a. 9 **b. 13** c. 17 d. 21 e. விடை தெரியவில்லை

54. The Mean of five numbers is 27. If one of the numbers is excluded, the Mean gets reduced by 2. What is the excluded number?

**a. 35** b. 27 c. 25 d. 40 e. Answer not known

5 எண்களின் சராசரி 27. இதில் ஒரு எண்ணை நீக்கும் போது சராசரி 2 குறைகிறது எனில் விடுபட்ட எண் எது?

**a. 35** b. 27 c. 25 d. 40 e. விடை தெரியவில்லை

55. How many 8's are there in the following sequence, which are preceded by 5, but not immediately followed by 3?

5 8 3 7 5 8 6 3 8 5 4 5 8 4
7 6 5 5 8 3 5 8 7 5 8 2 8 5

a. 1 b. 2 c. 3 **d. 4** e. Answer not known

கீழ்க்கண்ட எண் வரிசையில், எண் 5க்கு அடுத்து வரக்கூடியதும், எண் 3 தொடர்ந்த வராததுமாகிய எண் 8ன் எண்ணிக்கையைக் காண்.

5 8 3 7 5 8 6 3 8 5 4 5 8 4
7 6 5 5 8 3 5 8 7 5 8 2 8 5

a. 1 b. 2 c. 3 **d. 4** e. விடை தெரியவில்லை

56. Find the next number?

3, 10, 29, 66, 127, ______.

a. 164 b. 187 **c. 218** d. 216 e. Answer not known

அடுத்து வரும் எண் யாது?

3, 10, 29, 66, 127, ______.

a. 164 b. 187 **c. 218** d. 216 e. விடை தெரியவில்லை

57. The next number in the following sequences:
198, 194, 185, 169, ?
a. 92 b. 112 c. 136 **d. 144** e. Answer not known
பின்வரும் தொடர்வரிசையின் அடுத்த எண்
a. 92 b. 112 c. 136 **d. 144** e. விடை தெரியவில்லை

58. The value of a motor cycle depreciates at the rate of 15% per year. What will be the value of the motorcycle after 3 years hence, which is now purchased for Rs. 45,000.
a. Rs. 32,513 b. Rs. 37,635 **c. Rs. 27,636**
d. Rs. 38,250 e. Answer not known
ஒரு வாகனத்தின் மதிப்பு ஒவ்வோர் ஆண்டும் 15% குறைகிறது. வாகனத்தின் தற்போதை மதிப்பு ரூ. 45,000 எனில், 3 ஆண்டுகளுக்குப் பிறகு வாகனத்தின் மதிப்பு என்ன?
a. ரூ. 32,513 b. ரூ. 37,635 c. ரூ. 27,636
d. ரூ. 38,250 e. விடை தெரியவில்லை

59. If the HCF of two positive integers is 1 then what will be the two numbers?
**a. Relatively prime**
b. Atleast one of them must be a Prime number
c. Both are even numbers
d. One is the multiple of the other
e. Answer not known
இரு மிகை முழுக்களின் மீப்பெரு பொது வகுத்தி 1 எனில் அவ்விரு எண்களும் எவ்வாறு அழைக்கப்படும்?
a. அவ்விரு எண்களும் சார்பகா எண்கள்
b. ஒரு எண்ணாவது பகா எண்ணாக இருக்க வேண்டும்
c. இரு எண்களும் இரட்டை எண்கள்
d. ஒரு எண்ணின் மடங்கு மற்றொரு எண்
e. விடை தெரியவில்லை

60. 'ORCAM Read' is a device invented in 2021 to assist people with impairment in
**a. sight** b. hearing c. eating
d. mobility e. Answer not known
2021ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட 'ஆர்காம்-ரீட்' என்ற சாதனம் கீழ்வரும் எந்த வகையான குறைபாடுள்ள மனிதர்களுக்கு பயன்படுகிறது?
a. பார்வை b. கேட்டல் c. உண்ணுதல்
d. இயக்கம் e. விடை தெரியவில்லை

61. How many countries are the members in BRICs?
**a. 5** b. 4 c. 3 d. 2 e. Answer not known
BRICs என்ற அமைப்பில் எத்தனை நாடுகள் உறுப்பு நாடுகளாக இருக்கின்றன?
**a. 5** b. 4 c. 3 d. 2 e. விடை தெரியவில்லை

62. Annai Therasa Ninaivu Marriage Assistance scheme deals with
a. Poor Widows b. Minority c. Single Mothers
**d. Orphan Women's Marriage** e. Answer not known
பின்வருவனவற்றுள் அன்னை தெரசா நினைவுத் திருமண உதவித் திட்டம் எதனை அடிப்படையாகக் கொண்டது?
a. ஏழை விதவைகள் b. சிறுபான்மையோர் c. ஒற்றை தாய்மார்கள்
d. அனாதைப் பெண்களின் திருமணம் e. விடை தெரியவில்லை

63. Which sports person is the author of the book 'Playing it my way'?
a. Kapil Dev b. Yuvaraj Singh **c. Sachin Tendulkar**
d. Sania Nehwal e. Answer not known
'Playing it my way' என்ற புத்தகத்தை எழுதிய விளையாட்டு வீரர் யார்?
a. கபில் தேவ் b. யுவராஜ் சிங் c. சச்சின் டெண்டுல்கர்
d. சானியா நேவால் e. விடை தெரியவில்லை

64. Which of the following are incorrectly paired?

| Zonal Railways | | Head Quarters |
|---|---|---|
| 1. North Central | - | Allahabad |
| 2. Western | - | Mangalore |
| 3. Central | - | Jansi |
| 4. East Central | - | Hajipur |

a. 1 and 2 **b. 2 and 3** c. 1 and 4
d. 3 and 4 e. Answer not known
பின்வருபவற்றுள் எது தவறாக இணைக்கப்பட்டுள்ளன?

| ரயில் மண்டலம் | | தலைமையகம் |
|---|---|---|
| 1. மத்திய வடக்கு | - | அலகாபாத் |
| 2. மேற்கு | - | மங்களூர் |
| 3. மத்திய | - | ஜான்சி |
| 4. மத்திய கிழக்கு | - | ஹாஜிபூர் |

a. 1 மற்றும் 2 b. 2 மற்றும் 3 c. 1 மற்றும் 4
d. 3 மற்றும் 4 e. விடை தெரியவில்லை

65. The National Human Right Commission was established in the year
a. 1948 December, 9 **b. 1948 December, 10** c. 1949 December, 9
d. 1949 December, 10 e. Answer not known
தேசிய மனித உரிமை ஆணையம் அமைக்கப்பட்ட ஆண்டு
a. 1948 டிசம்பர், 9 b. 1948 டிசம்பர், 10 c. 1949 டிசம்பர், 9
d. 1949 டிசம்பர், 10 e. விடை தெரியவில்லை

66. Who succeeded K. Kamaraj as the Chief Minister of Madras Presidency?
a. C.N. Annadurai **b. M. Bakthavatsalam**
c. M. Karunanidhi d. P.S. Kumarasamy Raja
e. Answer not known
கே. காமராஜருக்கு பின் மதராஸ் மாநிலத்தின் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றவர் யார்?
a. சி.என். அண்ணாதுரை b. எம். பக்தவத்சலம்
c. மு. கருணாநிதி d. பி.எஸ். குமாரசாமி ராஜா
e. விடை தெரியவில்லை

67. The Announcement that, ECR (East Coast Road) will be renamed "Muthamizh Arignar Kalaignar Karunanidhi Salai" was made by the Chief Minister of Tamil Nadu M.K. Stalin in
a. February 02, 2022 b. March 02, 2022 c. April 02, 2022
**d. May 02, 2022** e. Answer not known
ECR (கிழக்கு கடற்கரைச் சாலை) என்ற பெயரை "முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதி சாலை" என்று அழைக்கப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்த நாள்
a. பிப்ரவரி 02, 2022 b. மார்ச் 02, 2022 c. ஏப்ரல் 02, 2022
d. மே 02, 2022 e. விடை தெரியவில்லை

68. The term "Secularism" is derived from _____ language.

a. Greek **b. Latin** c. Urdu
d. English e. Answer not known
"சமயச்சார்பின்மை" என்னும் சொல் _____ மொழியில் இருந்து வந்தது.
a. கிரேக்கம் b. இலத்தீன் c. உருது
d. ஆங்கிலம் e. விடை தெரியவில்லை

69. Indian ____ plays an important part in fostering unity and integration.
**a. Dance and Music** b. Literature and Grammar
c. Food and Customs d. Art and Architecture
e. Answer not known
இந்தியாவில் ______ ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வளர்க்க பெரிதும் உதவுகின்றன.
a. நடனம் மற்றும் இசை b. இலக்கியம் மற்றும் இலக்கணம்
c. உணவு மற்றும் பழக்கவழக்கங்கள் d. கலை மற்றும் கட்டிடக்கலை
e. விடை தெரியவில்லை

70. During the Pallava Period, the foreign merchants were known as
a. Pattanaswamy **b. Nanadesi** c. Videshi
d. Desi e. Answer not known
பல்லவர்கள் காலத்தில் அயல்நாட்டு வணிகர்கள் _____ என்று அறியப்பட்டனர்.
a. பட்டணசாமி b. நானாதேசி c. விதேசி
d. தேசி e. விடை தெரியவில்லை

71. The Archaeological survey of India headquarters is located in
**a. New Delhi** b. Mumbai c. Chennai
d. Kolkatta e. Answer not known
இந்திய தொல்லியல் துறையின் தலைமையகம் ______ உள்ளது.
a. புது தில்லி b. மும்பை c. சென்னை
d. கொல்கத்தா e. விடை தெரியவில்லை

72. Choose the correct pair from the following:
a. Holkar - Pune
**b. Bhonsle - Nagpur**
c. Scindhia - Baroda
d. Peshwa - Indore
e. Answer not known
கீழ்க்கண்டவற்றுள் சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்:
a. ஹோல்கர் - புனே
b. பான்ஸ்லே - நாக்பூர்
c. சிந்தியா - பரோடா
d. பேஷ்வா - இந்தூர்
e. விடை தெரியவில்லை

73. Identify the wrongly matched pair from the following:
**a. Zahir-ud-din Babur - The conqueror of the World**
b. Shah Jahan - King of the world
c. Shahji Bhonsle - Shivaji's Father
d. Regent of Akbar - Bairam Khan
e. Answer not known
கீழ்க்கண்டவற்றுள் எந்த இணை தவறாகப் பொருந்தியுள்ளது:

a. ஜாகிருதின் பாபர் - உலகைக் கைப்பற்றியவர்
b. ஷாஜகான் - உலகத்தின் அரசர்
c. ஷாஜி பான்ஸ்லே - சிவாஜியின் தந்தை
d. அக்பரின் பாதுகாவலர் - பைராம் கான்
e. விடை தெரியவில்லை

74. _____ is the epitome of Mughal architecture.
a. Gol Gumbaz
b. The Shalimar Gardens
c. Humanyun's Tomb
**d. Tajmahal**
e. Answer not known

______ முகலாயக் கட்டிடக் கலையின் சிறப்புமிக்க வடிவமாகும்.
a. கோல் கும்பாஸ்
b. ஷாலிமர் தோட்டங்கள்
c. ஹீமாயூனின் கல்லறை
d. தாஜ்மஹால்
e. விடை தெரியவில்லை

75. Who is the author of the book 'Why the Woman is Enslaved'?
a. Singaravelar
b. Muthulakshmi Ammaiyar
**c. Periyar**
d. Neelambikai Ammaiyar
e. Answer not known

'பெண் ஏன் அடிமையானாள்' என்ற நூலின் ஆசிரியர் யார்?
a. சிங்காரவேலர்
b. முத்துலட்சுமி அம்மையார்
c. பெரியார்
d. நீலாம்பிகை அம்மையார்
e. விடை தெரியவில்லை

76. ______ established a full fledges Printing Press in 1709, at Tranquebar.
a. Caldwell
b. F.W. Ellis
**c. Ziegenbalg**
d. Meenakshi Sundaram
e. Answer not known

1709-இல் தரங்கம்பாடியில் ______ ஒரு முழுமையான அச்சகத்தை நிறுவினார்.
a. கால்டுவெல்
b. F.W. எல்லிஸ்
c. சீகன்பால்கு
d. மீனாட்சி சுந்தரம்
e. விடை தெரியவில்லை

77. Pick the odd one out:
Rettaimalai Srinivasan
1. Founded the Adi Dravida Mahajana Sabha in 1893.
2. Participated in the First and Second Round Table Conferences held in London.
3. Frequently wrote columns under the pseudonym of "Chitraputtiran".
4. Was a signatory to the Poona pact of 1932.

a. 1, 2 and 3
b. 2 and 4
**c. 3 only**
d. 4 only
e. Answer not known

தவறான ஒன்றை தெரிவு செய்க:
இரட்டை மலை சீனிவாசன்
1. 1893-இல் ஆதி திராவிட மகாஜன சபை எனும் அமைப்பை உருவாக்கினார்.
2. இலண்டனில் நடைபெற்ற முதல் மற்றும் இரண்டாம் வட்ட மேசை மாநாடுகளில் கலந்துகொண்டார்.
3. அவ்வப்போது 'சித்திர புத்திரன்' எனும் புனைப் பெயரில் கட்டுரைகளும் எழுதினார்.
4. 1932-இல் செய்து கொள்ளப்பட்ட பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களுள் இவரும் ஒருவர்.

a. 1, 2 மற்றும் 3
b. 2 மற்றும் 4
c. 3 மட்டும்
d. 4 மட்டும்
e. விடை தெரியவில்லை

78. Father of Velunachiyar was

a. Muthu kumara Raghunatha Sethupathy
**b. Chellamuthu Vijaya Raghunatha Sethupathy**
c. Periya Udaiyar Sethupathy
d. Sundaresvara Raghunatha Sethupathy
e. Answer not known
வேலு ாநச்சியாரின் தந்தையின் பெயர் ______ ஆகும்.
a. முத்து குமார ரகுநாத சேதுபதி
b. செல்லமுத்து விஜய ரகுநாத சேதுபதி
c. பெரிய உடையார் சேதுபதி
d. சுந்தரேஸ்வர ரகுநாத சேதுபதி
e. விடை தெரியவில்லை

79. _____ is called the 'Lion of Sivaganga'.
**a. Periya Marudhu** b. Chinna Marudhu c. Velu Nachiyar
d. Kattapomman e. Answer not known
'சிவகங்கையின் சிங்கம்' என அழைக்கப்படுபவர் _______.
a. பெரிய மருது b. சின்ன மருது c. வேலு நாச்சியார்
d. கட்டபொம்மன் e. விடை தெரியவில்லை

80. Which of the following statements are true about Keezhadi?
(i) Evidence for brick buildings
(ii) Tamil-Brahmi inscriptions on pottery
(iii) Copper rods used for decorating eyelashes
(iv) Keezhadi has been mentioned in Pathitrupattu
a. (i), (ii) and (iv) only b. (i), (ii), (iii) and (iv) are true
**c. (i), (ii) and (iii) only** d. (ii) and (iv) only
e. Answer not known
கீழ்க்காணும் கூற்றுகளில் கீழடியைப் பற்றிய சரியான கூற்றுகள் எவை?
(i) செங்கற் கட்டுமானங்கள்
(ii) தமிழ் - பிராமி எழுத்துகள் கொண்ட மட்கல ஓடுகள்
(iii) கண்ணுக்கு மை தீட்டும் செப்புக் கம்பி
(iv) பதிற்றுப்பத்தில் கீழடியைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது
a. (i), (ii) மற்றும் (iv) சரி b. (i), (ii), (iii) மற்றும் (iv) அனைத்தும் சரி
c. (i), (ii) மற்றும் (iii) சரி d. (ii) மற்றும் (iv) சரி
e. விடை தெரியவில்லை

81. The name of the script used in the Sangam Age.
a. Kharoshthi b. Devanagiri **c. Tamil-Brahmi**
d. Grantha e. Answer not known
சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்து முறை யாது?
a. கரோஷ்தி b. தேவநாகிரி c. தமிழ்-பிராமி
d. கிரந்தம் e. விடை தெரியவில்லை

82. Tho' human beings in their birth are the same by diverse trade their worth isn't the same.
Trace the essence or meaning of this Kural
**a. Removal of Casteism** b. Removal of Communalism
c. Removal of Class System d. Removal of Varunasiram
e. Answer not known
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமை யான் - இக்குறள் வழிப் பெறப்படும் கருத்து யாது?
a. சாதி ஒழிப்பு b. மத ஒழிப்பு c. வர்க்க ஒழிப்பு
d. வருண ஒழிப்பு e. விடை தெரியவில்லை

83. What according Valluvar is the great help rendered by the son to his father?
a. Protection at his old age b. Saying good words
c. Give monetary help **d. To bring honour**
e. Answer not known
மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி – என்று வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகின்றார்?
a. முதுமையில் காத்தல் b. நற்சொல் கூறல்
c. பொருள் கொடுத்து உதவுதல் d. புகழும் படி வாழ்தல்
e. விடை தெரியவில்லை

84. What will happen to a man who walks in grace deters and walks towards materialism according to Valluvar?
a. Live a Good Life b. Live in Prosperity
**c. Get Destroyed** d. Live with Relatives
e. Answer not known
அருளை விரும்பி நடப்பவர், பிறர் பொருளை விரும்ப நேரிட்டால் அவர் என்ன ஆவார் என வள்ளுவர் வினவுகிறார்?
a. நன்கு வாழ்வார் டி. செழிப்புடன் வாழ்வார் உ. கெட்டொழிவார்
d. சுற்றமுடன் வாழ்வார் e. விடை தெரியவில்லை

85. Who according to Valluvar is superior to the person who does charity and penance?
a. One who never slanders **b. One who speaks truth**
c. One who is learned d. One who talks sweetly
e. Answer not known
தானமும் தவமும் செய்பவர்களைவிட உயர்ந்தவர்கள் யார் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்?
a. புறங்கூறாதவர் b. உண்மை பேசுபவர்
c. கல்வி கேள்விகளில் சிறந்தவர் d. இனிதாகப் பேசுபவர்
e. விடை தெரியவில்லை

86. What kind of wealth will give happiness according to Valluvar?
a. Donated Wealth b. Wealth by Rights
**c. Wealth that is earned through fair means**
d. Wealth by Warfare
e. Answer not known
எப்படிப்பட்ட பொருள் ஒருவருக்கு இன்பத்தைத் தரும் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?
a. கொடையால் வந்த பொருள் b. உரிமையால் வந்த பொருள்
c. தீதின்றி வந்த பொருள் d. போரால் வந்த பொருள்
e. விடை தெரியவில்லை

87. How does Valluvar see those who fix their attention on impermanent things?
a. In Excellence **b. Deplorable** c. Hopeful
d. Surprised e. Answer not known
நிலையற்றவைகளை நிலையானவை என்று கருதுகிறவர்களை வள்ளுவர் எப்படிப் பார்க்கிறார்?
a. பெருமையாக b. இழிவாக c. நம்பிக்கையாக
d. வியப்பாக e. விடை தெரியவில்லை

88. Match the following:

A. First Automobile industry	1. Serampore
B. National News print and Paper Mill	2. Kolkata
C. Central Silk Board	3. Nepa Nagar
D. First Paper Mill India	4. Bangalore

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a.** | **2** | **3** | **4** | **1** |
| b. | 4 | 3 | 2 | 1 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 4 | 1 | 2 | 3 |

e. Answer not known

சரியாகப் பொருந்தியுள்ளதைக் காண்க.

A. முதல் வாகனத் தொழிற்சாலை	1. செராம்பூர்
B. தேசியச் செய்தித்தாள் மற்றும் காகித ஆலை	2. கொல்கத்தா
C. மத்திய பட்டு வாரியம்	3. நேபா நகர்
D. முதல் காகிதத் தொழிற்சாலை	4. பெங்களூரு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a.** | **2** | **3** | **4** | **1** |
| b. | 4 | 3 | 2 | 1 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 4 | 1 | 2 | 3 |

e. விடை தெரியவில்லை

89. Which of the following statements are true about the weakness of Green Revolution?
(i) This strategy needed heavy investment in seeds and fertilizers.
(ii) Boosted the production of major cereals like wheat and rice.
(iii) Larger chemical use reduced the soil fertility.
a. (i) and (ii) only **b. (i) and (iii) only** c. (i) only
d. (ii) and (iii) only e. Answer not known

பசுமைப் புரட்சியின் பலவீனங்கள் என்பதைப் பற்றிய பின்வரும் வாக்கியங்களில் எவை சரியானவை?
(i) விதைகள் மற்றும் உரங்களுக்குப் பேரளவு மூலதனம் தேவைப்படுகிறது.
(ii) முதன்மைப் பயிர்களான கோதுமை மற்றும் நெவட உற்பத்தி பன்மடங்காகப் பெருகியது.
(iii) அதிக உரங்களின் பயன்பாடு நிலத்தின் செழுமைத் தன்மையைப் பாதித்தது.
a. (i) மற்றும் (ii) மட்டும் b. (i) மற்றும் (iii) மட்டும் c. (i) மட்டும்
d. (ii) மற்றும் (iii) மட்டும் e. விடை தெரியவில்லை

90. In 1940 Bombay Plan was Presented by
a. 8 Leading Politicians b. 8 Leading Economists
c. 8 Leading Philosophers **d. 8 Leading Industrialist**
e. Answer not known

1940 இல் பம்பாய் திட்டத்தை வழங்கியவர்கள்
a. எட்டு முன்னணி அரசியல் அரசியல்வாதிகள்
b. எட்டு முன்னணி பொருளியல் அறிஞர்கள்
c. எட்டு முன்னணி தத்துவவாதிகள்
d. எட்டு முன்னணி தொழில் அதிபர்கள்
e. விடை தெரியவில்லை

91. Per capita Income can be calculated by
**a. National Income/Population** b. National Income – Population
c. National Income + Population d. National Income × Population

e. Answer not known
தனிநபர் வருமானம் கணக்கிடப்படுவது
a. தேசிய வருமானத்திலிருந்து மக்கள் தொகையை வகுத்தல்
b. தேசிய வருமானத்திலிருந்து மக்கள் தொகையைக் கழித்தல்
c. தேசிய வருமானத்திலிருந்து மக்கள் தொகையைக் கூட்டுதல்
d. தேசிய வருமானத்திலிருந்து மக்கள் தொகையைப் பெருக்குதல்
e. விடை தெரியவில்லை

92. The Aim of the Second Five Year Plan
a. Removal of Poverty **b. Rapid Industrialization**
c. Employment d. Social Justice
e. Answer not known
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கம்
a. வறுமை ஒழிப்பு b. விரைவான தொழில் வளர்ச்சி
c. வேலைவாய்ப்பு d. சமூக நீதி
e. விடை தெரியவில்லை

93. Which of the following point(s) is/are being included while defining 'Social Justice'.
1. Equal rights
2. Equal opportunity
3. Equal treatment
4. Equal distribution of wealth for all
a. 1 only b. 1 and 2 only **c. 1, 2 and 3 only**
d. 1, 2 and 4 only e. Answer not known
கீழ்க்காண்பவற்றுள் எது/எவை 'சமூக நீதி'யை வரையறுக்கும் பொழுது சேர்த்துக் கொள்ளப்படுகிறது.
1. சம உரிமை
2. சம வாய்ப்பு
3. சமமாக நடத்துதல்
4. செல்வத்தினை அனைவருக்கும் சமமாக பகிர்தல்
a. 1 மட்டும் b. 1 மற்றும் 2 மட்டும் c. 1,2 மற்றும் 3 மட்டும்
d. 1, 2 மற்றும் 4 மட்டும் e. விடை தெரியவில்லை

94. First Human Development Report by Tamil Nadu Government was published in the year
a. 2000 **b. 2003** c. 2006 d. 2004 e. Answer not known
தமிழக அரசு முதல் மனித வளர்ச்சி அறிக்கை வெளியிட்ட ஆண்டு
a. 2000 **b. 2003** c. 2006 d. 2004 e. விடை தெரியவில்லை

95. Choose the correct matched type :
1. NHRC - National Human Rights Commission
2. SHRC - Statutory Human Rights Commission
3. NCW - National Council for Women
4. RTI - Right to Information Act
a. 1 and 2 are correct **b. 1 and 4 are correct** c. 2 and 3 are correct
d. 2 and 4 are correct e. Answer not known
இதில் சரியானவை எவை?
1. NHRC – தேசிய மனித உரிமைகள் ஆணையம்
2. SHRC – சட்டப்படியான மனித உரிமைகள் ஆணையம்
3. NCW – தேசியப் பெண்கள் மன்றம்
4. RTI – தகவல் அறியும் உரிமைச் சட்டம்

a. 1 மற்றும் 2 சரியானவை b. 1 மற்றும் 4 சரியானவை
c. 2 மற்றும் 3 சரியானவை d. 2 மற்றும் 4 சரியானவை
e. விடை தெரியவில்லை

96. Which Article of the Constitution provides for an Election Commission of India?
a. Article 280 b. Article 315 **c. Article 324**
d. Article 365 e. Answer not known
இந்திய தேர்தல் ஆணையம் அமைக்க வழிவகை செய்யும் அரசியலமைப்பு பிரிவு எது?
a. பிரிவு 280 b. பிரிவு 315 c. பிரிவு 324
d. பிரிவு 365 e. விடை தெரியவில்லை

97. Which district is the top exporter of finished leather goods in the country?
a. Salem **b. Vellore** c. Dindigul
d. Madurai e. Answer not known
இந்தியாவில் தோல் பொருட்களை அதிகளவில் தயாரித்து ஏற்றுமதி செய்யும் மாவட்டம் எது?
a. சேலம் b. வேலூர் c. திண்டுக்கல்
d. மதுரை e. விடை தெரியவில்லை

98. Tamil Nadu Health System Reform programme is implemented with the funding support of
**a. World Bank** b. World Health Organization
c. UNESCO d. National Health Mission
e. Answer not known
தமிழ்நாடு சுகாதாரச் சீரமைப்பு திட்டத்திற்கு நிதி உதவி எதன் மூலம் கிடைக்கின்றது?
a. உலக வங்கி b. உலக சுகாதார நிறுவனம்
c. யுனெஸ்கோ d. தேசிய சுகாதார மிஷன்
e. விடை தெரியவில்லை

99. Literacy Rate in Tamil Nadu
a. 79.9% **b. 80.9%** c. 81.9% d. 82.9% e. Answer not known
தமிழ்நாட்டில் கல்வியறிவு விகிதம்
a. 79.9% **b. 80.9%** c. 81.9% d. 82.9% e. விடை தெரியவில்லை

100. _____ Scheme was designed to bridge the learning gaps that developed as a result of the pandemic imposed lock down.
a. Smart Classroom Scheme b. Computer Labs Scheme
**c. Illam Thedi Kalvi Scheme** d. Illam Thedi Maruthuvam Scheme
e. Answer not known
பெருந்தொற்று நோயினால் முடக்கப்பட்ட காரணத்தால் உருவான கற்றல் குறைபாட்டை சரி செய்வதற்கு உருவாக்கப்பட்ட திட்டமே _______ ஆகும்.
a. மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப வகுப்பறை திட்டம்
b. கணினி ஆய்வகத் திட்டம்
c. இல்லம் தேடிக் கல்வி திட்டம்
d. இல்லம் தேடி மருத்துவம் திட்டம்
e. விடை தெரியவில்லை